பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 04 2025 FRIDAY 7.15 PM

ஆகாஷவாணி

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

- கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ரோம் சென்றடைந்தார்.

- பாகிஸ்தான் உடனான சிந்து நதி ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

- இங்கிலாந்து உடனான வர்த்தக ஒப்பந்த நடவடிக்கைகள் நிறைவடையும் நிலையில் இருப்பதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

- வெளிப்படையான வரி முறையை உருவாக்குவதில் இந்திய வருவாய்ப்பணி அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

- ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ரோம் சென்றடைந்தார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுடன், வாடிகன் நகருக்கு மத்திய அமைச்சர்கள் திரு கிரண் ரிஜிஜு, திரு ஜார்ஜ் குரியன், கோவா சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு 'Joshua De Souza ' ஆகியோரும் சென்றுள்ளனர்.

செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் வைக்கப்பட்டுள்ள போப் பிரான்சிஸின் உடலுக்கு குடியரசுத் தலைவர் திருமதி முர்மு, மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தவுள்ளார் என்றும், நாளை நடைபெறும் அன்னாரது இறுதிச்சடங்கில் அவர் பங்கேற்பார் என்றும் வெளியுறவு அமைச்சக அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த திங்கட்கிழமை வாடிகன் நகரில் காலமான போப் பிரான்சிஸின் இறுதிச்சடங்கில் உலகின் பல்வேறு நாடுகளிலும் இருந்து ஏராளமான தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

<<<<<<>>>>>>

பாகிஸ்தான் உடனான சிந்து நதி ஒப்பந்தத்தை நிறுத்திவைப்பதாக மத்திய அரசு முடிவெடுத்துள்ள நிலையில், இதுகுறித்த ஆலோசனை கூட்டம் புதுதில்லியில் உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு ஜெய்சங்கர், திரு சி ஆர் பாட்டீல் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

இங்கிலாந்து உடனான வர்த்தக ஒப்பந்த நடவடிக்கைகள் நிறைவடையும் நிலையில் இருப்பதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் நடைபெறும் இந்திய எஃகு மாநாட்டிற்கு இடையே செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமெரிக்கா உடனான இருதரப்பு வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும், திட்டமிட்ட காலத்திற்கு முன்பே ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும் என்றும் கூறினார்.

சர்வதேச சந்தை சூழலுக்கு ஏற்ப, தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை பல்வேறு நாடுகளுடன் இந்தியா ஏற்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் எஃகு துறையை மேம்படுத்தி, உலக அளவில் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எஃகு துறையில் முறையற்ற வர்த்தக நடைமுறைகளை தடுக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு மற்றும் உலக அளவிலான தேவையை எதிர்கொள்ளும் வகையில் இந்திய எஃகு துறை குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கும் என்றும் திரு பியூஷ்கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தில்லி மாநகராட்சியின் புதிய மேயராக பிஜேபி-ஐ சேர்ந்த திரு ராஜா இக்பால்சிங் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேயர் தேர்தலில் பதிவான 142 உறுப்பினர்களின் வாக்குகளில், 133 பேர் திரு இக்பால் சிங்குக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருக்கு எட்டு வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

இந்த மேயர் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி போட்டியிடாமல் புறக்கணித்தது.

துணை மேயருக்கான தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் வேட்புமனுவை திரும்பப்பெற்றதால், பிஜேபி-யை சேர்ந்த திரு ஜெய்பகவான் யாதவ் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

மேயராக தேர்வு செய்யப்பட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய திரு ராஜா இக்பால் சிங், தலைநகரில் தண்ணீர் தேங்கும் பிரச்சினையை தீர்க்க முன்னுரிமை அளிக்கபடும் என்று குறிப்பிட்டார்.

மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுப்பதுடன், மாநகரை தூய்மையாக வைத்துக்கொள்ளும் இலக்குடன் செயல்பட இருப்பதாகவும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் அனைவரும் கண்டறியப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி மற்றும் ராணுவ உயரதிகாரிகள் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர், அவர்கள் துணை நிலை ஆளுநரை சந்தித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

அப்போது பேசிய திரு மனோஜ் சின்ஹா, இந்த தாக்குதலுக்கு காரணமானவர்கள் நீதியின்முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் தீவிரவாதத்தை இந்த பகுதியிலிருந்து முழுவதுமாக ஒழிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று கூறினார்.

ராணுவத்தினரின் வீரம் மற்றும் துணிச்சல் குறித்து நாட்டு மக்கள் முழுமையான நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், தாக்குதலில் தொடர்புடையவர்களை அடையாளம் காண்பதில் காவல்துறையினருடன் ராணுவத்தினர் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் திரு மனோஜ் சின்ஹா கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

நாட்டில் வெளிப்படையான மற்றும் பொறுப்பான வரி முறையை உருவாக்குவதில் இந்திய வருவாய்ப்பணி அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் பாலசமுத்திரத்தில் இந்திய வருவாய்ப்பணி பயிற்சி அதிகாரிகளின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நலன்களை பாதுகாப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்ட கர்மயோகிகளாக வருவாய்ப்பணி அதிகாரிகள் திகழ்வதாகவும் அவர் கூறினார்.

தைரியத்துடனும், தெளிவுடனும் நாட்டை வழிநடத்த இந்த அதிகாரிகள் உதவ வேண்டும் என்றும், வளர்ச்சியடைந்த இந்தியாவை முன்னெடுத்துச் செல்வதில் அவர்களின் திறன் நம்பிக்கை அளிக்கக்கூடியது என்றும் திரு பங்கஜ் சௌத்ரி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

ஸ்ரீநகரில் இருந்து 183 பயணிகள் மும்பைக்கு பாதுகாப்பாக வந்து சேர்ந்ததாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரண்டு சிறப்பு விமானங்கள் மூலம் அவர்கள் இன்று மாலை மும்பை வந்தடைந்ததாகவும், எஞ்சியுள்ள 232 பேரையும் ஏற்றிக்கொண்டு மூன்றாவது விமானம் விரைவில் வந்தடையும் என்றும் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து ஸ்ரீநகரில் தவித்த பயணிகளை பத்திரமாக அவர்களின் சொந்த மாநிலங்களுக்கு அனுப்பும் நடவடிக்கையை விமான போக்குவரத்து அமைச்சகம் திறம்பட கையாண்டு வருவதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<<<>>>>>>

அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் தூதர் திரு 'Steve Witkoff மாஸ்கோவில் இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினை சந்தித்து பேசினார்.

யுக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டுவர ராஜ்ய ரீதியலான நடவடிக்கையின் முக்கிய அம்சமாக தமது தூதர், ரஷ்ய அதிபரை சந்தித்திருப்பதாக திரு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, யுக்ரைன் விவகாரத்தில் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள ரஷ்ய அதிபர் மாளிகை தயார் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு 'Sergey Lavrov'தெரிவித்திருந்த நிலையில், ட்ரம்பின் தூதர், திரு புட்டினை சந்தித்திருப்பது முக்கியத்துவம் பெறுகிறது என்றாலும், பேச்சுவார்த்தை விவரங்களை வெளியிட திரு ட்ரம்ப் மறுத்துவிட்டார்.

<<<<<<>>>>>>

சுதந்திரப்போராட்ட வீரர் V D Savarkar குறித்து அவதூறான கருத்துக்களை தெரிவித்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்திக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

நீதிபதிகள் திரு தீபாங்கர் தத்தா, திரு மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இதுபோன்ற பொறுப்பற்ற கருத்துக்களை தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் என்று திரு ராகுல்காந்தியை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய ஒற்றுமை யாத்திரையின்போது கடந்த 2022-ஆம் ஆண்டு மகாராஷ்ட்ரா மாநிலம் அகோலா என்ற இடத்தில் பேசிய திரு ராகுல்காந்தி, சாவர்கர் குறித்து அவதூறாக பேசியதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் நீதிபதிகள் இந்த கண்டனத்தை தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் நடைபெறவுள்ள இப்போட்டியில், Animesh Kujur, Anu Kumar, Tamilarasu, Nithya Gandhe உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

இப்போட்டி தென்கொரியாவின் Gumi –யில் அடுத்த மாதம் 27-ஆம் தேதி தொடங்கி, 31-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

-----------------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Khushi Chand அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜோர்டனின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், வியட்நாமின் Nguyen Thi Hong Yen –ஐ வென்றார்.

48 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Jiya - வியட்நாமின் Dinh Thi Ru Na-வையும், 54 கிலோ எடைப்பிரிவில் Jannat யுக்ரைனின் Anhelina Rumiantseva –வையும் வென்றனர்..

17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் Ambekar Meetai, Aman Dev, Tikam Singh, Udham Singh மற்றும் Rahul Gariya-வும் காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--------------

Menorca ஓபன் செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் Nihal Sarin தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

----------------

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Shah – Diya Chitale, Sathiyan Gnanasekaran - Sreeja Akula, Harmeet Desai – Yashaswini Ghorpade இணைகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

---------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ஹைதராபாத் அணி பந்துவீச தீர்மானித்துள்ளது.

<<<<<<END>>>>>>